Seedling Nurseries

* 378 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any scheme has been envisaged for raising seedling nurseries by the Panchayat Unions in the State; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) அண்மையில் கிராம வளர்ச்சி தல நிர்வாகத் துறையில் 26-8-1966 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட 2064 எண் அரசாங்க ஆணையின்படி, பஞ்சாயத்து யூனியன்கள் செடிப் பண்ணைகள் அமைத்தல் நான்காவது திட்டக் காலத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் பெற்ற திட்டங்களில் ஒன்றாகும். பஞ்சாயத்து யூனியன் அலுவலக வளைவுகளில் அல்லது பஞ்சாயத்து யூனியனின் அதிகார வரம்பிற்குட்பட்ட செறிவான நிலப்பகுதிகளில் உள்ள பயிரிடத்தக்க நிலங்களை உற்பத்திக்குப் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். தனிப்பட்டவர்களுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் அடக்க விலையில் வழங்கப்படுவதற்கும் யூனியன் சாலை ஓரங்கள் நெடுகவும் நடப்படுவதற்கும் காய்கறி நாற்றுகள், பழ நாற்றுக்கள் அல்லது வெட்டுக் கிளைகளிலிருந்து வளர்க்கப்படும் செடிகளும் வாணிப நோக்கில் பலன்தரும் செடிகளும் வளர்க்கப்படலாம். இத்துடன், தரமான விதைகளைப் பெருக்கிக் கொள்வதற்கும் பஞ்சாயத்து யூனியனுக்கு வருவாய் ஈட்டித் தருவதற்கும் காய்கறிச் செடிகள் பயிரிடப்படலாம், பழத் தோட்டங்கள் அமைக்கலாம்.

திரு. வை சங்கரன் : இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளும் போது பஞ்சாயத்து யூனியனுக்கு எவ்வளவு உதவி வழங்க சர்க்கார் உத்தேசித்துள்ளது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஏற்கனவே நிலம் இருக்கின்றவர்களுக்கு திட்ட அடிப்படையில் கவர்ன்மென்ட் கிராண்ட் 2,500 ரூபாய் என்றால், 2,500 ரூபாய் கான்ட்ரிப்யூஷன் கொடுக்க வேண்டும். நிலத்தைப் பண்படுத்தும் செலவுகளை எல்லாம் யூனியன் நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளலாம்.

Diploma in Printing

* 379 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minisiter for Information and Publicity be pleased to state—

(*a*) the number of persons who have obtained L.P.T. (Diploma in Printing) since the starting of the Diploma in Printing course;

(*b*) the number among them employed in the existing Government Printing Presses and the number among them who have been offered employment in the proposed Government Printing Press at Salem; and

(*c*) whether the Government propose to give them preference in such employments?

3rd November 1966]

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) 650.

(இ) மத்திய அச்சகம், சென்னை—71.

அரசாங்க வட்டார அச்சகம், சேலம்—1.

அரசாங்க வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி—2.

(உ) ஆம். அச்சுத் தொழிலியல் டிப்ளோமா (L.P.T. Diploma) கூடுதல் தொழில் நுட்பத்தகுதியாக நிச்சயிக்கப்பட்டுள்ள பற்பல தொழில் நுட்ப வேலைகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுது அச்சுத் தொழிலியல் டிப்ளோமா பெற்றவர்களுக்கும் முதலிடம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி டிப்ளோமோ பெறுதவர்கள் அரசாங்க அச்சகத்தில் எவ்வளவு பேர் எடுக்கப்பட்டிருக்கிறார்கள்? இவர்களுடைய விகிதாசாரம் என்ன?

கனம் திரு. கோ. பூவராகன் : விகிதாசாரக் கணக்கு இல்லை. டிப்ளோமா பெற்றவர்கள் 650 பேர். 1963-66 வரை அரசாங்க அச்சகத்தில் மனுப் போட்டவர்களின் எண்ணிக்கை 80. அவர்களிலே 70 பேர்களுக்குமேல் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. வை சங்கரன் : அச்சுத் தொழிலில் பயிற்சி கொடுத்து டிப்ளோமா கொடுப்பது என்பது பொதுவாக இல்லாத ஒன்று அரசாங்கம் அதை எடுத்து பயிற்சி கொடுத்திருக்கும் நிலையில் 650 பேர்களில் 70 பேர்களுக்குத்தான் வேலை கிடைத்திருக்கிறது. அவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கு முதலிடம் கொடுத்து அரசாங்க அச்சகத்தில் அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்களா?

கனம் திரு. கோ. பூவராகன் : அவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கு முதற் சலுகை அளிக்கப்படுகிறது என்று முதல் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போதே கூறியிருக்கிறேன்.

திருவள்ளுவர் சிலை

***380 கேள்வி.—திரு. கோ. சி. மணி : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப்** பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் 2—5—1966-ல் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை திறப்பு விழா அரசாங்க செய்தி இலாகாவினரால் திரைப்படமாக (செய்திக்கதிர்) எடுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அத்திரைப்படம் திரையிடப்பட்டுள்ளதா?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இல்லை. மத்திய அரசாங்க செய்திப்படத்துறையினர் திரைப்படம் எடுத்தார்கள்.

(இ) அந்தத் திரைப்படம் 5—8—1966-ல் திரையிடப்பட்டுள்ளது.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.